1955 - 2015

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
வைரவிழா மலர் வெளியீடு

# இந்து ஒளி

## Hindu Oli

## ALL CEYLON HINDU CONGRESS


DIAMOND JUBILEE COMMEMORATIVE ISSUE

60

1955-2015



# ஈழத்துச் சைவக்கல்விப் பாரம்பரியத்தில் சைவாசிரிய கலாசாலைகள்



**தி. செல்வமனோகரன்**
வருகைதரு விரிவுரையாளர்
இந்து மெய்யியல் - இந்து நாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆய்வுச் சுருக்கம்**

ஈழத்து நவீன சைவக்கல்விப் பாரம்பரியம் ஆறுமுகநாவலருடன் தொடங்குகின்றது. அவரின் முயற்சிகளும் அவரின் வழிவந்தவர்களின் முயற்சிகளும் ஈழத்தில் சைவம் தனக்கென ஒரு கல்விப்பாரம்பரியத்தை உருவாக்கக் காரணமாயின. காலனித்துவ அரசு ஆங்கிலக்கல்வி, அரச உத்தியோகம் எனப்பல உத்திகளைக் கைக்கொண்டு சைவர்களை கிறிஸ்தவர்களாக்க முயற்சித்தது. இதற்கு எதிராகத் திரண்ட சைவப் பெருமக்களில் சிலர் சைவக் கல்விப் பாரம்பரியத்தை வளர்க்க அரும்பாடுபட்டனர். அச்சிந்தனை வழி சைவப்பாடசாலைகள் உருவாக்கம் பெற்றன. அங்கு கற்பிக்க கிறிஸ்தவ ஆசிரியர்களையே நம்பியிருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டதால் அதனைத் தகர்க்க சைவாசிரிய கலாசாலைகள் உருவாக்கம் பெற்றன. இதற்கு நிறையப் போராடவேண்டியிருந்தது.

இக்கலாசாலைகளின் வழி ஈழத்தில் பல சமூக மாற்றங்கள் உருவாயின. படித்த சைவ மத்தியதர வர்க்கத்தின் உருவாக்கம், அதன் வழி அடைந்த

மேனிலை, பெண்கல்விக்கு முன்னுரிமை, அதன் மூலம் ஏற்பட்ட பெண்கள் வேலைக்குச் செல்லுதல், தலைமை தாங்குதல் உள்ளிட்ட பெண் சுதந்திரம் ஒரளவேனும் ஏற்பட்டது. இதன் வழி கலாசாலை, பாடசாலை, சிறுவர் இல்லங்கள் என்பவற்றில் நடைமுறைப்படுத்தப்பட்ட சமபோசனம், சமஆசனம் உள்ளிட்ட பெரும்புரட்சிகள் முன்னெடுக்கப்பட்டு அதில் பெருமளவில் வெற்றியும் ஏற்பட்டது. அவ்வாறான மாற்றங்கள், நவீன உலகுக்குகேற்ப நம்மைப் புதுப்பித்துக் கொள்ளுதல், அறிவு விருத்தி என்பன ஏற்பட உதவின.ஆகவே இக்கலாசாலைகள் ஈழத்து சைவக்கல்விப் பாரம்பரிய வரலாற்றில் மிக உயர்ந்த ஸ்தானத்தை வகிக்கின்றன. ஈழத்துச் சைவக்கல்விப் பாரம்பரியத்தில் சைவாசிரிய கலாசாலைகளின் வகிபாகத்தை வரலாற்று முறை, விபரணமுறை எனும் ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி இக்கட்டுரை ஆராய்கின்றது.

## 1.O ஆய்வு அறிமுகம்

### 1.1. சூழல்

தமிழகத்தைப்போல ஈழத்துச் சைவக்கல்வி மரபும் தொன்மையும் தனித்துவமும் வாய்ந்ததாகும். காலனித்துவ ஆட்சியில் குறிப்பாக போர்த்துக்கேய, ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் சைவப்பாரம்பரியம் சற்று ஈடாட்டம் கண்டது. அதிகாரவர்க்கம் தன்மேலாண்மையால் தன் மதப்பரம்பலுக்காக சுதேச சமயங்களை – பண்பாடுகளை இல்லாதொழிக்க முனைப்புடன் தொழிற்பட்டது. ஆங்கிலேய ஆட்சியிலும் அந்நிலை நீங்கியபாடில்லை. ஆயினும் 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஈழத்துச் சைவர்களின் கற்றறி சூழல் புதுயுகம் ஒன்றிற்கான அறைகூவலை விட உதவிற்று. எமது தேசம் தன் சுதேச மொழி, சமய, பண்பாட்டம்சங்களை தொலைத்து விடாது, மீட்டுருவாக்கம் செய்யவும் நல்லைநகர் ஆறுமுகநாவலர் பற்பல பணிகளைச் செய்தார்.[1] தேசிய சிந்தனாவாதியாய் கருத்தியல் விடுதலைக்கு எதிராக முள்ளை முள்ளால் எடுப்பது போல கிறிஸ்தவர்கள் தம் சமயப் பண்பாட்டுப் பரவலாக்கத்திற்கு எவையெவற்றைப் பயன்படுத்தினார்களோ அவையவற்றை நாவலரும் பயன்படுத்தினார். சைவமறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.

இம்மறுமலர்ச்சியை நிலைப்படுத்த உதவும் முக்கிய செயற்பாடாக அவர் கருதியது சைவர்களுக்கு சுதேச சமயக்கல்வியூட்டலாகும். சைவத்தமிழ்க் கல்வியோடு ஆங்கிலமும் தேவை எனக் கருதினார். அதற்காகப் பல சைவப்பாடசாலைகளை உருவாக்கினார். சைவ ஆங்கிலப்பாடசாலை செயற்றிட்டத்தில் அவர் தோல்வியுற்றது துரதிஷ்டவசமானது. ஆயினும் அவர் வழிவந்த சேர். பொன். இராமநாதன், சேர்.பொன். அருணாசலம்., த. கைலாசப்பிள்ளை, காசிவாசி செந்திநாதஐயர் உள்ளிட்ட பெரியவர்கள் பலர் நிறுவன ரீதியிலும் தனிப்பட்ட நன்கொடைகள் மூலமும் சைவத்தமிழ்ப் பாடசாலைகளையும்சைவவாங்கிலப்பாடச ாலைகளையும் உருவாக்கினர். நாவலரின் மரணத்தின் பின் தோன்றிய சைவ பரிபாலனசபையும் பல பாடசாலைகள் உருவாக முன்னின்றுழைத்தது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் உருவாக்கமும் அதனை நிர்வகித்த சபையும் சைவக்கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்தன.பல அறிஞர்களின் முயற்சியினால் அரசு, சைவப் பாடசாலைகளுக்கும் உதவி நன்கொடை வழங்க முன் வந்தது.[2] இதன்வழி மேலும் பல பாடசாலைகள் உருவாயின. ஆயினும் அங்குகற்பிக்க சைவம், தமிழ், ஆங்கிலம் தெரிந்த – பன்முக அறிவுள்ள சுதேசிகள் ஆசிரியர்களாக இல்லை என்பது பெருங்குறையாயிற்று. இச்சிந்தனை வழி ஆசிரிய கலாசாலைகள் உருவாகின.

### 1.2. கிறிஸ்தவ ஆசிரிய கலாசாலைகள்

இலங்கையில் 1834ஆம் ஆண்டில் வடமாகாணத்தில் 249 சைவத்தமிழ்ப் பாடசாலைகளும் 160 கிறிஸ்தவப்பாடசாலைகளும் 24 றோமன் கத்தோலிக்கப் பாடசாலைகளும் இருந்தன.[3] வெளிநாட்டவர்களும், வெளிநாட்டில் கல்வி கற்றவர்களும், மதபோதகர்களுமே கிறிஸ்தவப் பாடசாலைகளின் ஆசிரியர்களாக விளங்கினர். மதமாற்றநடவடிக்கைகள்பெருகப்பெருகப்பாடசாலைகளும் அதிகரித்தன. மாணவர்களும் அதிகரித்தனர். இதனால் ஆசிரியர்பற்றாக்குறை ஏற்படத் தொடங்கியது. இதனை நீக்க வட்டுக்கோட்டை அமெரிக்க மிஷன் தன் சர்வசாஸ்திரக் கலாசாலையில் 1845ஆம் ஆண்டு THE NORMAL SCHOOL எனும் நியமப்பாடசாலையை ஆரம்பித்தது.[4] 1855இல் சர்வசாஸ்திரக் கலாசாலை "தோம்சன் ஆண்டர்சன்" ஆணைக்குழுவின் முன்மொழிவினால் இடைநிறுத்தப்பட்டது. 1859இல் மீளவும் ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் சர்வசாஸ்திர கலாசாலை இருந்த இடத்தில் யாழ்ப்பாணக்கல்லூரி உருவானபோது 1871ல் இவ்வாசிரிய கலாசாலை கிறிஸ்தவப் பகைப்புலத்தை அடிப்படையாகக் கொண்ட தெல்லிப்பழைக்கு இடம் மாற்றப்பட்டது. இது ஆண்களுக்கான கலாசாலை; சமகாலத்தில் இச்சபையால் உடுவிலில் மகளிர் ஆசிரிய கலாசாலை உருவாக்கப்பட்டது.

சேர்ச் மிஷனரி சபையினர் கோப்பாயில் ஆண்களும் பெண்களும் இணைந்து கற்கக் கூடிய ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையையும் வெஸ்லியன் திருச்சபையினர் 1837ஆம் ஆண்டு கொட்டடியில் ஆண்களுக்கான கலாசாலையையும் வேம்படியில் பெண்களுக்கான

கலாசாலையையும் தோற்றுவித்தனர். கத்தோலிக்கத் திருச்சபை 1881ல் கொழும்புத்துறையில் ஆண்களுக்கான கலாசாலையையும் திருக்குடும்பக்கன்னியர் மடத்தில் பெண்களுக்கான கலாசாலையையும் உருவாக்கியது.

அமெரிக்க மிஷன் தன் தெல்லிப்பழைக் கலாசாலையில் கைத்தொழிற் கல்விப் பிரிவையும் 1978ல் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. 1884இங்கு வருகை தந்த மகா தேசாதிபதி ஆதர் கோடன் இக்கைத்தொழிற் கல்வியைப் பாராட்டியதோடு இங்கு கற்ற சி.கே. யேசுதாசன் என்பவரை அமெரிக்க கைத்தொழிற்பாடசாலை ஒன்றில் கல்வி கற்கப் புலமைப் பரிசிலும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.[5]

## 2.0. சைவர்களின் கல்வி நிலை

கிறிஸ்தவ மத, பொருளாதார, கல்வி நடவடிக்கைகளால் கிறிஸ்தவப் பாடசாலைகள் வளரவளர சைவப் பாடசாலைகளும் சைவக்கல்வியும் தேய்நிலை உற்றன. பல பாடசாலைகள் மூடப்பட்டன. திண்ணைப் பள்ளிகளே ஓரளவு காணப்பட்டன. மரபு வழிக்கல்வியே போதிக்கப்பட்டது. இச்சூழலில் கிறிஸ்தவ கல்லூரியில் நவீன கல்வியை கற்ற நல்லூர் ஆறுமுகம் சைவத்தின் நிலைகண்டு ஏங்கித் தன் வாழ்வை சைவத்துக்காய் அர்ப்பணித்தார். நவீன சைவக்கல்வி மரபைத் தோற்றுவிக்க அரும்பாடுபட்டார். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றார். அவர் பணி வழி ஈழத்துச் சைவ சமூகம் விழிப்புணர்வு பெற்றது. ஆங்கிலமும் சைவமும் இணைந்த கல்வியை உருவாக்க முயற்சித்தது. நாவலரின் சைவாங்கிலப் பாடசாலைக்கான கனவை அவரின் மறைவின் பின் உருவான சைவபரிபாலன சபை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை சைவாங்கிலப் பாடசாலையாக உருவாக்கி நிறைவு செய்தது.

ஈழத்தில் மிகச்சிறந்த முறையில் நவீன சைவாங்கிலக் கல்வியைத் திட்டமிட்டு உருவாக்கவும், நவீன நிர்வாக முறைக்குட்பட்ட ஆண், பெண் பாடசாலைகளையும் சைவாசிரிய கலாசாலைகளையும் உருவாக்கிய பெருமகனாக சேர். பொன். இராமநாதனையே சுட்டஇயலும்.[6] நாவலர் வழி நின்று கிறிஸ்தவ ஊடுருவலை தடுக்கவும் சைவாங்கிலக் கல்வியை மேம்படுத்தவும் சைவ சமூக மேம்பாடு நிகழ பெண் கல்வியின் அவசியத்தினை உணர்ந்து அதனைச் செயற்படுத்தவும் முற்பட்டவர் அவரே.

## 3.0. சைவாசிரிய கலாசாலைகள்

நாவலர் காலத்தும் அவரின் மறைவின் பின்னரும் பல சைவப்பாடசாலைகள் நிறுவப்பட்டன. சைவபரிபாலன சபை, விவேகானந்த சபை உள்ளிட்ட சைவ நிறுவனங்களும் தனிப்பட்ட சைவர்களும் சைவப்பாடசாலைகளை நிறுவினர். கிறிஸ்தவ மதப்பரம்பலை தடுப்பது இதன் அடிப்படை நோக்கம் எனினும் சைவக்கல்வி வளர்ச்சியில் அவர்கள் கொண்டிருந்த அக்கறையையும் இது புலப்படுத்துகின்றது. சைவப்பாடசாலைகள் பெருகிய போதும் அதனை நிர்வகிக்கவும் அங்கு கற்பிக்கவும் கிறிஸ்தவப் பாடசாலைகளையும் கிறிஸ்தவ ஆசிரிய கலாசாலைகளையுமே நம்பி இருக்க வேண்டிய நிலை இருந்தது. குறிப்பாக அரச நன் கொடையைப் பெற, பயிற்றப்பட்ட தராதராப் பத்திரமுள்ளவர்களே தலைமையாசிரியராக, ஆசிரியராக இருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.[7] இதனால் சைவப்பாடசாலைகள் பெரும் இடர்பாடுகளுக்கு முகம்கொடுத்தன.

அதே வேளை கிறிஸ்தவ ஆசிரியப்பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப்பயிற்சி பெற வேண்டுமாயின் சைவர்கள் கிறிஸ்தவர்களாக மதம்மாற வேண்டி இருந்தது. சிலர் மதம்மாறினர். அவருட் சிலர் தராதரப்பத்திரம் எடுத்ததன் பின் சைவராயினர். இது சைவர்களுக்கு தர்மசங்கடமான சூழலாகவே அமைந்தது.இந்நிலையில் கிறிஸ்தவத்துக்கு மதம்மாறாததால் பரீட்சை எழுதியும் தராதரப்பத்திரத்தைப் பெற முடியாத காரைநகர் அருணாசலம் அவர்களின் சைவாசிரிய கலாசாலை ஒன்றை நிறுவ வேண்டும் எனக் கங்கணங்கட்டி நின்றார்.[8] இச்சிந்தனை வழி தாமே தம்மூரான காரைநகரில் ஓர் ஆசிரிய கலாசாலையை நிறுவ முயன்று தோல்வி கண்டார். ஆயினும் அவரின் முயற்சி தொடர்ந்தது. அதன் பயனாக கீரிமலைச் சிவன் கோவிலுக்கு அண்மித்த கிருஷ்ணபிள்ளை மடத்திற்கு வடதிசையில் மாதகல் பிரமஸ்ரீ ஏரம்பையர் வாழ்ந்து கொண்டிருந்த வீட்டில் கலாசாலை தொடங்கப் பெற்றது. மக்களிடம் 1913. 07.09 திகதியிடப்பட்ட செய்தியூடாக நிதியும் கோரப்பட்டது. சட்டசபை உறுப்பினர் அ. கனகசபை தலைவர், பிரசித்த நொத்தாரிசு திரு. T. S துரையப்பா செயலாளர், திரு.Sவிஸ்வப்பா பொருளாளர் ஆகவும் நியமிக்கப்பட்டனர். பிற்காலத்தில் இந்துபோட் சு. இராசரத்தினம் என அழைக்கப்பட்ட திரு. சு இராசரத்தினமவர்களே அக்கலாசாலையின் முகாமையாளரும் திரு.கே. இளையதம்பி அவர்கள் அதிபருமாவார்[9] இவ்வாளுமை மிக்க ஆளணியிருந்தும் இருவருடத்துக்குள் இக்கலாசாலை மூடப்பட்டது. ஆயினும் அருணாசலம் அவர்கள் வண்ணார் பண்ணை நாவலர் பாடசாலையில் இக்கலாசாலையை மீள நடாத்த முற்பட்டார். அரசு வசதியீனங்களைக் காட்டித்தடுத்தது.

ஆயினும் அருணாசலம் அவர்களின் இடைவிடா முயற்சியும் சேர். பொன் இராமநாதன் சேர். அ. கனகசபை ஆகியோரின் பரிந்துரைகளாலும் கோப்பாய் சேர்ச் மிஷனால் நடத்தப்பட்ட ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1916ஆம் ஆண்டு "ஐக்கிய பயிற்சிக் கலாசாலை" (united training school) ஆரம்பிக்கப்பட்டது. தெல்லிப்பழை அமெரிக்க மிஷன் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையும் இதனுடன் இணைக்கப்பட்டது. கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவர்களும் சைவர்களும் இணைந்த சபை ஒன்று நிறுவப்பட்டு இக்கலாசாலை நிர்வகிக்கப்பட்டது. கத்தோலிக்கர் இதனை நிராகரித்து கொழும்புதுறையில் ஓர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையை ஆரம்பித்தனர். கோப்பாய் ஐக்கிய பயிற்சிக் கலாசாலையில் பயின்ற சைவ ஆசிரிய மாணவர்க்கு காரைநகர் திரு. வை. ஆறுமுகம்பிள்ளை உணவும் உறையுளும் கொடுத்தார். ஆயினும் இக்கலாசாலையின் ஆயுள் ஏழு ஆண்டுகளுடன் முடிவுற்றது. இக்காலத்தில் 64 சைவாசிரியார்களே உருவாகினர்.

சேர்.பொன். இராமநாதன் வழங்கிய ஐந்து ஏக்கர் காணியில் கோப்பாய் அரசினர் ஆசிரியப்பயிற்சிக் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1946இல் கோப்பாய் மகளிர் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடம் திருநெல்வேலியிலும் 1947இல் கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையிலும் இயங்கத் தொடங்கியது. அங்கு கற்ற ஆண்கள் பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு இடமாற்றப்பட்டனர். 1977இல் அப்போதைய அரசால் இவை சிறப்புப் பயிற்சிக் கலாசாலைகளாக மாற்றப்பட்டன. அதன் வழி பலாலி கலாசாலையில் இருந்த நுண்கலை, மனைப்பொருளியற் பிரிவுகள் கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலைக்கு மாற்றப்பட்டன. அன்று தொட்டு கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கோப்பாய் அரசினர் பயிற்சிக் கலாசாலையாக மாறியதோடு ஆண் பெண் சரிநிகர் சமமாய்க் கற்கும் கலாசாலையுமாயிற்று.

1924இல் சட்டசபை உறுப்பினராகிய திரு.சு. இராசரத்தினம் அவர்கள் 1926இல் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்குத் தெரிவாகும் சைவாசிரியர்களின் எண்ணிக்கையை "40" இருந்து "75" ஆக உயர்த்தும் படி கல்விப் பணிப்பாளரிடம் கோரினார். அக்கோரிக்கை அக்கலாசாலையின் வசதியீனத்தைக் காட்டி நிராகரிக்கப்பட்டது. அதன் வழி உந்தப்பட்ட இராசரத்தினம் அவர்களின் முயற்சியும் சைவ வித்தியாவிருத்திச் சங்கப் பணிப்பாளர்களின் பங்களிப்பும் இணைய திருநெல்வேலியில் சைவாசிரியர் கலாசாலை 1928 ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.இதன் அதிபர் - மயிலிட்டி சி. சுவாமிநாதன், உப அதிபர் - பொ.கைலாசபதி, தமிழ் விரிவுரையாளர் - பண்டிதமணி.சி.கணபதிப்பிள்ளை, இன்றளவும் இவர்களின் புகழ் நின்று நிலவுதல் கண் கூடு.[10]

இவற்றிற்கு இடையில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் மகளிர்க்கான கலாசாலை ஒன்றை 1926இல் மருதனார்மடத்தில் நிறுவினார். இதன் முதலதிபராக திரு.கே.எம் விஸ்வலிங்கம் எனும் ஆண்மகனாரே விளங்கியமை குறிப்பிடத்தக்கது. தெய்வத்திருமகள் கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி உள்ளிட்ட பல பெண்மணிகள் இக்கலாசாலையிலே பயின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சேர்.பொன் இராமநாதன் அவர்களின் மருகரும் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான திரு.சு.நடேசபிள்ளை அவர்கள் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை ஒன்றை 1935இல் ஆரம்பித்தார். இங்கு பண்டித, ஆசிரியர் பயிற்சியைக் கொண்ட 3 ஆண்டுப்பயிற்சி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இங்கும் புகழ் நிறைந்த பெரியோர்களான கலாநிதி.கு.சிவப்பிரகாசம், நவநீத கிருஷ்ணபாரதியார் உள்ளிட்ட பலர் பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையரசு அறுபதுகளில் நாட்டிலுள்ள பாடசாலைகள், ஆசிரியகலாசாலைகள் என்பவற்றைப் பொறுப்பெடுத்தது. அதன் வழி ஆசிரிய கலாசாலைகள் சமயம் சாரா கலாசாலைகளாக மாற்றப்பட்டன. திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை உள்ளிட்ட சில கலாசாலைகள் மூடப்படத் தமிழ்ப் பிரதேசத்தில் மட்டக்களப்பு, பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளே இன்று மிஞ்சியுள்ளன. இவையும் மூடப்படும் அபாய நிலையே காணப்படுகின்றது. அவற்றுக்கு மாற்றீடாகத் தேசியகல்வியற் கல்லூரிகள் தோற்றம் பெற்றுள்ளன என்பதும் சுட்டத்தக்கது.

### 3.1.சைவாசிர்ய கலாசாலையின் பணிகள்

சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் வழி யாழ்ப்பாணக் கல்விப்பாரம்பரியத்திற்கு அளப்பெரிய பங்களிப்புச் செய்த இந்து போர்ட். இராசரத்தினம் அவர்களின்

> *"யாழ்ப்பாணத்தின் இந்துக் கல்வி இயக்கம், கிறிஸ்தவர்களுக்கோ அல்லது வேறு யாருக்குமோ எதிரான இயக்கமன்று"*[11]

எனும் கூற்று முக்கியமானதாகும். குறித்த ஒரு நாட்டு மக்கள், ஓர் இன மக்கள் தம் தாய் மொழி, சமயம்,

பண்பாடு, கலை கலாசாரத் தொன்மங்களையும் தத்தம் தனித்துவங்களையும் பேணுதல் வேண்டும். அதன் வழி ஆங்கிலக் கிறிஸ்தவக் கல்வி சமூக அசைவியக்கத்தில் ஏற்படுத்திய எதிர் மறைத் தாக்கத்தையே ஈழத்துத் தமிழ்ச் சைவசமூகமும் எதிர் கொண்டது. இதன் வழியில் தான் யாழ்ப்பாணப்பாடசாலைகள் - சைவாசிரிய கலாசாலைகள் என்பவற்றின் உருவாக்கச் சூழலையும் அவற்றின் பணிகளையும் புரிந்து கொள்ள வேண்டும்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஈழத்துச் சைவக்கல்விப் பாரம்பரியத்திற்குப் பங்களிப்புச் செய்த நிறுவனங்களில் ஒன்று.

> " *மிகப்பெரிய இந்துக் கல்வி நிறுவனமாகவும், இயக்கமாகவும் விளங்கியது சைவ வித்தியா விருத்திச் சங்கம். இச்சங்கத்தின் வளர்ச்சியும் தோற்றமும் ஈழத்து இந்துக் கல்வி இயக்கங்களுக்கு மேலும் புத்துணர்ச்சியை அதிகரித்தன.* "[12]

எனும் கூற்று இதன் மெய்மையைப் புலப்படுத்துகின்றது.

இச்சங்கத்தால் உருவாக்கப்பட்ட சைவாசிரிய கலாசாலையை முன்னிறுத்தியே சைவாசிரிய கலாசாலைப் பணிகளை நாம் இங்கு ஆராய முற்படுகின்றோம். காரணம் இந்நிறுவனம் ஏனைய கலாசாலைகளுடன் ஒப்பிடும் போது நிறைந்த ஆசிரியர்களையும் நிறைந்த பாடசாலைகளையும் நிறைந்த மாணவர்களையும் சைவ உலகில் உற்பவித்தது. நீண்ட ஆயுளைக் கொண்டது. பலகிளைச் செயற்பாடுகளையும் முன்னெடுத்தது.

இச்சைவாசிரிய கலாசாலைகளின் பணிகளை ஆய்வின் வசதி கருதி பின்வருமாறு பகுத்துரைக்கலாம்.

1. சைவாசிரியர்களை உருவாக்கியமை.
2. காவிய பாடசாலைகளை நடாத்தியமை
3. சாதனா மற்றும் சைவப்பாடசாலைகளை நடாத்தியமை.
4. அநாதைச் சாலைகளை அமைத்தமை.
5. சுயபாஷா மற்றும் பெண்கல்வி என்பன விருத்தியுற உதவியமை.
6. கிளை நிறுவனங்கள் அல்லது இதர செயற்பாடுகள்

### 3.1.1. சைவாசிரியர்களின் உருவாக்கம்

இருபதாம் நூற்றாண்டின் முதற்காற் பகுதியிற் காணப்பட்ட சைவாசிரியர்களின் பற்றாக்குறை அதனைத் தொடர்ந்து வந்த அரைநூற்றாண்டுச் செயற்பாட்டினால் புதிய அத்தியாயங்களை அகலத் திறந்தது. திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலை முப்பது ஆண்டுகளில் ஏறத்தாழ மூவாயிரம் ஆசிரியர்களை உற்பவித்தது. இராமநாதன் பெண்கள் ஆசிரியர்கலாசாலை சைவப்பெண்களின் வரலாற்றில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியது. 1948இல் திருநெல்வேலி சைவ ஆசிரியர் கலாசாலையில் ஆணும் பெண்ணும்[13] சரிநிகர் சமமாய் கற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. அக்கலாசாலை மூடப்படும் காலத்தில் பெண்களே அதிகம் கற்றமை குறிப்பிடத்தக்கது.[14] இக்கலாசாலைகளில் கற்ற சைவாசிரியர்கள் யாவரும் சைவாசார சீலர்களாகவும், பெரும்பாலும் சைவசமய தீட்சை பெற்றவர்களாகவும் விளங்கினர். இவர்களின் ஆடை, வேட்டியும் நஷனலுமாகக் காணப்பட்டது. இவர்களின் சிந்தனை – செயல்களில் மரபின் நீட்சியும் புதுமையின் ஓட்டமும் காணப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் இறுதிவரை இவர்கள் செல்வாக்குமிக்க ஆசிரியர்களாகவே காணப்பட்டனர். இன்றைய உழைக்கும் அல்லது வேலை செய்யும் தலைமுறை அந்தக் கலாசாலை உற்பத்திகளின் உற்பத்திகளே.

இவ்வாசிரியர்கள் சைவமும் தமிழும் கணிதமும் அறிவியலும், பூமிசாஸ்திரமும் மட்டுமல்லாது விவசாயத்தையும் சிறுகைத்தொழிலையும், உடற்கல்விகளையும் பாடங்களாகக் கற்றனர். இவர்களுள் பலர் ஆசிரியர்களாகவும் விவசாயிகளாகவும் இருந்ததை நாமே கண்கூடாகக் கண்டுள்ளோம்.

### 3.1.2. காவியப் பாடசாலை

இவ்வாசிரியர்கள் சுயபாஷாவில் கற்றவர்கள். உலக நடத்தையியலுக்கேற்ப தம்மை இவர்கள் கட்டமைத்துக் கொள்ளும் பொருட்டு ஆங்கிலம், சமஸ்கிருதம், சிங்களம் என்பன காவியப் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டன. ஆசிரிய கலாசாலையில் காவியப் பாடசாலைகளை உருவாக்கியமைக்கு மேற்சொன்னதும் நாவலர் வழிவந்த காவியப் பாடசாலை மரபை அழியவிடாது காப்பதுமே முக்கிய காரணங்களாகின்றன. பாலபண்டித, பண்டித வகுப்புக்களும் நடாத்தப்பட்டன. பரமேஸ்வரா ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மூன்று வருடப் பயிற்சிநெறியை நடாத்தித் தம் ஆசிரியரைப் பயிற்றப்பட்ட தராதரப்பத்திரமுள்ளவராகவும் பண்டிதர் சான்றிதழ் பெற்றவருமாகவே வெளியேற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாசிரிய கலாசாலைகள் யாவும்

ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்துடனும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துடனும் நெருக்கமாக தொடர்பு பேணியமை குறிப்பிடத்தக்கது.

### 3.1.3. சாதனா மற்றும் சைவப்பாடசாலைகளின் உருவாக்கமும் வளர்ச்சியும்

ஒவ்வொரு சைவாசிரியகலாசாலையும் தத்தமக்கென ஒவ்வொரு பயிற்சி அல்லது சாதனா பாடசாலையை உருவாக்கியது. அத்தோடு முன்னரே இருந்த பாடசாலைகளுக்கும் புதிய பாடசாலைகளுக்கும் இக்கலாசாலைகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். ஒரு பாடசாலை அரச உதவி நன்கொடை பெற வேண்டுமெனில் இப்பாடசாலைகளில் குறித்த சதவீதத்தில் பயிற்றப்பட்ட தராதரப்பத்திரம் உள்ள ஆசிரியர்கள் இருக்க வேண்டும் என்ற தேவை இதன்வழி பூர்த்தி செய்யப்பட்டது. சைவவித்தியா விருத்திச் சங்கம் இக்கலாசாலையை முன்னிறுத்திப் பல பாடசாலைகளை உருவாக்கியது. அறுபதுகளில் அரசிடம் இச்சங்கம் “187”பாடசாலைகளை ஒப்படைத்தமை ஈழத்தின் மிகவும் மதிப்பும் முக்கியத்துவமும் வாய்ந்த வரலாற்றுச் சாதனைப் பதிவாகும்.

### 3.1.4. அநாதை சாலைகள் (தற்போது இச்சொல் பயன்படுத்தப்படுவதில்லை சிறுவர் இல்லங்கள் என்றே கூறப்படுகின்றது.)

இக்கலாசாலைகளோடு சமாந்தரமாக அநாதை சாலைகளும் தோற்றுவிக்கப்பட்டன. ஆதரவற்ற குழந்தைகள் இங்கு தங்கவைக்கப்பட்டு சாதனா பாடசாலைகளுக்கு கற்க அனுப்பப்பட்டனர். இக்குழந்தைகளுக்கு உணவு, உடை, உறையுள் என்பன உள்ளிட்ட அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டன. ஆசிரிய மாணவர்களும் இங்கு தங்கி மேற்படி வசதிகளைப் பெற்று ஆசிரிய பயிற்சியைப் பெற்றனர். இதனூடாக மதமாற்றம் தடுக்கப்பட்டதோடு ஈழத்துத் தமிழ்ச் சைவ சமூக அசைவியக்கத்தில் வறுமைக்குட்பட்ட சமூகம் மேனிலை பெற வழியேற்படுத்தப்பட்டது.

### 3.1.5 சுயபாஷா மற்றும் பெண்கல்வி

தமது சுயபாஷையான தமிழில் தம்மின கலை, கலாசார, சமய, மொழி மற்றும் அறிவியலை அறியவாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. ஆணொடு சமமாய் வாழ்வினில் அனைத்து உயர்ச்சிகளையும் சைவப் பெண்கள் பெற இராமநாதன் பெண்கள் ஆசிரியகலாசாலை, திருநெல்வேலி சைவ ஆசிரியகலாசாலை, கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியகலாசாலை என்பன உதவின. குறித்த காலத்தின் பின் ஆணாசிரியர்களைவிட பெண்ணாசிரியர்கள் அதிகமாகக் காணப்பட்டனர். இச்செயற்பாடுகளினூடாகக் கற்றறிந்த சைவசமூகம் உருவாக உறுதிமிகு அத்திபாரம் இடப்பட்டது.

### 3.1.6 இதர செயற்பாடுகள்

இக்கலாசாலைகளின் எழுச்சியோடு ஒட்டி வெறும் ஏட்டுக்கல்வியை மட்டும் வழங்காது கைத்தொழில்சார் கல்வியும் வழங்கப்பட்டது. குறிப்பாக சைவவித்தியா விருத்திச் சங்கம் 1952ஆம் ஆண்டு அறிக்கையின் படி “13”நெசவுச்சாலைகளும் “16”பன்னவேலை நிலையங்களும் உருவாக்கப்பட்டு கற்றவர், கல்லாதவர் - இளையவர், முதியவர் எனும் பாகுபாடு இன்றி யாவர்க்கும் தொழிற்கல்விவழங்கப்பட்டது. இதன்வழிசிறுகைத்தொழில் வளர்ச்சியும் சுயபொருளாதார மேம்பாடும் ஏற்பட இந்நிறுவனங்கள் உதவியுள்ளமை கவனத்திற்குரியது.

### 3.2. ஈழத்துச் சைவத்தமிழுலகில் ஏற்படுத்திய தாக்கங்கள்.

இக்கலாசாலைகளின் உருவாக்கம் - செல்நெறி – ஆற்றிய பணிகள் என்பன ஈழத்துத் தமிழ்ச் சூழலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. சைவப்பாரம்பரியச் சூழலில் நாவலர் வழிவந்த சமயபாடமும் நவீன கல்விக் கொள்கைக்கியைபான பாடங்களும் இவ்வாசிரியர்களுக்குப் போதிக்கப்பட்டன.[15]

சுதந்திர இலங்கையின் மும்மொழிப் புலமையாளர்களின் உருவாக்கத்திற்கும் பண்டிதர்களின் பெருக்கத்திற்கும் இக்கலாசாலைகளும் இங்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் முக்கிய காரணமாயினர். இதன் வழி தமிழோடு ஆங்கில, சமஸ்கிருத, சிங்கள மொழிப்புலமையாளர்கள் உருவாயினர். சைவாசிரிய கலாசாலைகளில் கலைகளுக்கும் முதன்மை கொடுக்கப்பட்டது. வடஇலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்கும் முதன்மையளிக்கப்பட்டது. இவற்றை,

*“திருநெல்வேலிசைவாசிரிய கலாசாலை அக்காலத்தில் ஒரு கலாஷேத்திரமாகவே காட்சியளித்தது”*[16]

எனும் கூற்று உறுதிப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறான ஆளுமைமிகு ஆசிரியர்களின் உருவாக்கம், அவர்களின் பணி என்பன சைவப்பாடசாலைகள் தமிழ்ச் சமூகத்தில் முக்கியத்துவம் பெற வழிசமைத்தது. இவ்வாசிரியர்கள்

சைவப்பாடசாலைகளில் மட்டுமல்லாது இஸ்லாமியப் பாடசாலைகளிலும் நியமிக்கப்பட்டனர். எத்தகைய சூழலிலும் தம் சமய நம்பிக்கை தளராத அதே வேளை ஏனையவர் மனம் புண்படத்தக்க வரட்டுமதவாதிகளாக அவர்கள் இருக்கவில்லை. ஆதலால் அனைத்துச் சமயசார்புடைய பாடசாலைகளும் இவ்வாசிரியர்களின் ஒழுக்கத்தையும் பண்பையும் ஆளுமையையும உணர்ந்து தத்தம் பாடசாலைகளில் நியமனம் செய்ய முற்பட்டனர்.[17]

இவை தம்முள்ளும் திருநெல்வேலி சைவாசிரியகலாசாலையின் புகழே ஓங்கியது. இக்கலாசாலையில் நிறுவன ரீதியாக இருந்த சைவத் தமிழ்ச் செழிப்பு கவனத்திற்குரியதாகும். இங்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பெரும் புகழ்ப் பெற்றார்கள். தாம் இங்கு கற்றதைப் பெருமையுடன் நினைவுகூருகின்றார்கள். இக்கலாசாலை அதிபருக்கு பிற சமயப்பாடசாலை அதிபர்கள் தமிழ் ஆசிரியர்களை நியமனம் செய்ய சிபாரிசு செய்யுமாறு கோரி, கடிதங்களும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.[18]

கிறிஸ்தவக் கல்வி மரபின் வழி உருவான படித்த மத்தியதரவர்க்கத்தைப்போல இக்கலாசாலைகளின் வழி படித்த சைவமத்தியதரவர்க்கம் உருவாயிற்று. தனித்த, மரபு மாறாத நவீன கலாசாரம் பயில்நிலைபெறத் தொடங்கியது. சைவப்பாடசாலைகள் பெருகின. அதற்கேற்ப சீர்மைப்படுத்தப்பட்ட கல்வி மரபைப் பெற்றுக் கொண்ட கல்வியாளர்களும் உருவாகினர். இவர்களின் வழி சுயபாஷா மூலமான கல்வியும் சமயக்கல்வியும் அழுத்தம் பெற்றன. வீட்டுக்குள்ளே பூட்டப்பட்டிருந்த பெண்கள் சுதந்திரமும் கல்வியும் பெறவும் பெற்ற கல்வியைப் போதிக்கும் தரத்தைப் பெறவும் வெளியூர் சென்று பணிபுரிதலுமாகிய முற்போக்குச் சிந்தனைகள் வளர இக்கலாசாலைகளின் மூலம் வழி ஏற்படுத்தப்பட்டது. படித்த ஆண், பெண் இணைவு அறிவியல் உலகிற்கேற்ற பிள்ளைகளை உருவாக்கியது. இதன் மூலம் மதம் மாற்றலுக்கான கல்வி காணாமல் போயிற்று. உயர்சாதி, தாழ்சாதி பேதங்கள் நீங்கவும் கலாசாலைகள் உதவின. ஒன்றாக உறைந்து ஒன்றாக உண்டு ஒருவர்க்கொருவர் ஒத்தாசையாய் வாழும் சமூகமாற்றம் கலாசாலைகளின் விடுதிகளில் அரங்கேறிற்று. இங்கு பெற்ற சமஆசனம், சமபோசனம் எனும் வாழ்வியலை பாடசாலைகளில் மாணவரிடத்தே பிரயோகித்தனர். சாதியக் கட்டமைப்பு மிகுந்த யாழ்ப்பாணத்தில் சைவ சமயச் சார்புடைய இந்நிறுவனங்கள் செய்த இரத்தம் சிந்தாப் பெரும் சமூகப்புரட்சியாக இதனைச் சுட்டலாம். இது, பேதங்கடந்த சமூக உருவாக்கம் பற்றிய பிரக்ஞையை ஓரளவேனும் ஏற்படுத்திற்று.

## நிறைவுரை

சைவாசிரியகலாசாலைகள் சார்ந்த முயற்சி 1913ல் ஆரம்பமாயினும் அம்முயற்சி இராமநாதன் மகளிர் ஆசிரியப்பயிற்சிக்கலாசாலை, திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை, பரமேஸ்வரா ஆசிரிய கலாசாலை என்பவற்றின் ஊடாக வெற்றிபெறுகிறது. இவை தம்முள்ளும் திருநெல்வேலி சைவாசிரியப் பயிற்சிக்கலாசாலை முதன்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும். இக்கலாசாலைகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மரபும் நவீனமும் அறிந்த பன் மொழிப்புலமையாளர்களாக, பண்டிதர்களாக உருவாக்கம் பெற்றனர். சைவாசாரமும் ஒழுக்கமும் சைவத்தமிழ்ப் பாரம்பரிய ஆடைகள் அணிபவர்களாயும் திகழ்ந்தனர். சுதந்திர இலங்கையில் சைவத்தமிழ்ப் பாரம்பரியம் நிலைகொள்வதற்கு இவர்கள் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. இக்கலாசாலைகளின் எழுச்சி பிற்போக்குத்தனமான பலசிந்தனைகளைக் கொண்டிருந்த சமூகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. பெண்கல்வி, சமஆசனம், சமபோசனம், அநாதை விடுதிகளின் உருவாக்கம், யாவர்க்கும் கல்வி எனும் சிந்தனையும் செயலும் இதற்குச் சில உதாரணங்கள் ஆகும். படித்த சைவ மத்தியதர வர்க்க உருவாக்கம் அதன் பின் பல அறிவியலாளர்களை, பல்தொழில் விற்பன்னர்களை உருவாக்கிற்று. சைவ இலக்கியங்களும், தமிழ்க் கலாரசனையும் பரவலாக்கம் பெற இங்கு பயின்ற ஆசிரியர்கள் காரணமாயினர். அத்தோடு இலங்கையில் கம்யூனிச - மார்க்ஸிய சித்தாந்தவாதிகள், நாத்திகவாதிகள் பெருக்கம் அறுபதுகளில் ஏற்படத் தொடங்கியபோதும் அவற்றினின்றும் சைவத்தைக் காத்த — நிலை நிறுத்திய பெருமை இக்கலாசாலைகளின் வாரிசுகளையே சாரும். அந்த வகையில் ஈழத்துச் சைவக்கல்விப் பாரம்பரியத்தில் சைவாசிரியகலாசாலைகளின் பங்களிப்பு பெருத்த சமூக மாற்றத்தை ஏற்படுத்திற்று என்பது மிகையல்ல.

## அடிக்குறிப்பு

1. சந்திரசேகரம்.ப.பேராசிரியர்.,1 987 "யாழ்ப்பாணக் குடா நாட்டில் 20ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த இந்து சமயக் கல்வி மறுமலர்ச்சி" லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரை, யாழ்ப்பாணம், ப.4.
2. மேற்படி., பக். 10 – 12.
3. Ceylon Almanac, 31.12.1925
4. Chelliah. J.V., 1948, A Century of English education, The Story of Batticotta Seminary

and Jaffna College, reprint: star line Printers, Colombo. p.35

5. சிவராசா.மு., 1985,“தமிழாசிரியர் பயிற்சிப் பின்னணியில் காங்கேசன்துறைக் கல்வி வட்டாரம்”, காங்கேசன் கல்வி மலர். அதிபர் சங்கம். காங்கேசன்துறை. ப.169.

6. Vythilingam.m., 1977, The Life of Sir Ponnampalam Ramanathan, pp.549 – 558.

7. கணபதிப்பிள்ளை.பண்டிதமணி.சி.,1971 திரு.ச.அருணசலம்,“அணிந்துரை”, சைவமகாசபை, காரைநகர், ப .ஔை.

8. சிவராசா.மு., 1985,மேற்படி, பக்.170 - 171.

9. The Hindu board – AnnualReport,1930. P-29.

10. சுசீந்திரராஜா. பேராசிரியர். சு., 2002, ஈழத்துப்பண்டிதமணி, குமரன் புத்தக இல்லம், இலங்கை,ப.29.

11. Rajaranam.s.,1930, Hindu Education in jaffna” reporls of the Hindu Board Education,p.26

12. சந்திரசேகரம்.ப.பேராசிரியர்.,1987 மேற்படி., ப.17

13. நாவலன், வருடாந்த இதழ்,1947.சைவாசிரிய கலாசாலை, திருநெல்வேலி,ப.89.

14. திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை நாவலன் மலரில் (1957) உள்ள படங்கள் இதற்கு ஆதராமாகும்.

15. Swaminathan.s.,1930, The Hindu education Movement and Jaffna Saiva training Institute the Hindu Board pp.28- 32

16. செந்திநாதன்.கனக. மூன்றாவதுகண் ப.23.

17. சுசீந்திரராஜா.பேராசிரியர்.சு.,மேற்படி., ப.29

18. மேற்படி.

## நாக வழிபாடு



பெரும்பான்மையான சுப்பிரமணியத் தலங்கள் மலை மீது அமைந்திருப்பதைக் காணலாம். நோய் உள்ளவர்களும், மனோதிடம் இல்லாதவர்களும் படிகளில் ஏறி மேலே போய் முருகனைத் தரிசனம் செய்தால் அவை நீங்கிய தைரியசாலிகள் ஆவார்கள். முருகனை நினைவுபடுத்தும் நாகப்பாம்பு அத்தகையதே. முதுகொலும்பே இன்றி வளைந்தோடும் நாகசர்ப்பம் நல்லுணர்வு பெற்றதும் நிமிர்ந்து நின்று படமெடுத்து ஆடுவது, பக்தர்கள் மனம் திருந்துவதையே உணர்த்துகிறது.

மனிதனுடைய உடம்பில் உள்ள பிராணசக்தி ஆசனத்தில் பாம்புபோலச் சுருண்டு கிடக்கிறது. தியானத்தின் மூலம் அது எழுப்பப்படும்போது சுருண்டு கிடந்த பாம்பைப் போன்று அது எழுந்து உயருகிறது. குண்டலினி சக்தி முதுகெலும்பு வழியே உயர்ந்து தலையில் உள்ள சகஸ்ராரபீடத்தை எட்டுகிறது. இப்படி எழுந்து மனிதனின் சக்தியை முழுமையாக்கும் குண்டலினி யோகம், சுருண்டெழுந்து நிமிர்ந்து படம் எடுக்கும் சர்ப்பத்தின் மூலம் அடையாள பூர்வமாக நமக்குக் காட்டப்படுகிறது.

நம்முடைய உடம்பில் ஆறு நிலைகளைப் படிப்படியாக எட்டும் குண்டலினி சக்தி ஏழாவதாக சகஸ்ராரத்தை எட்டுகிறது. அதுவே முடிவானதும் முழுமையானதும் ஆகும். ஏழுமலையான் என்று பக்தர்கள் நாராயணனை வழிபடும் மலைகள் சேஷகிரி என அழைக்கப்படும் ஆதி சேஷனின் இருப்பிடத்தையே உணர்த்துவதாகும். இங்கேயும் சக்தி ஆதிசேஷன் உருவில் பாம்பாகவே வழிபடப்படுகிறது.

வாழ்கையில் இவ்வாறு உயரும் சக்தி சொரூபமாக நாம் காணுவதே, நாகபஞ்சமியில் சர்ப்ப வழிபாடாக இந்துக்களால் ஏற்கப்படுகிறது. சிவபெருமானுக்கு ஆபரணமாகவும், திருமாலுக்குப் படுக்கையாகவும், முருக வழிபாட்டுக்கு ஆதாரமாகவும் திகழ்கிறது.

“அர்த்தமுள்ள இந்து ஆலய வழிபாடு”